பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 05 | புதன்கிழமை | 19.03.2025 | கதிர் 131

**இனி இது ரகசியம் அல்ல!**

இப்பவெல்லாம் பொலிஸார் எந்தக் குற்றவாளியைப் பிடித்தாலும் அவர் முதலில் அரச படைகளில் ஏதாவது ஒன்றில் இருந்தவரா என்றுதான் விசாரிக்கிறார்கள். ☞ 2

## உயிர்த்த ஞாயிறு சம்பவம் குறித்த பேராயரின் ஆதங்கம் நியாயமே

### ஏற்றார் அமைச்சர் ஜயதிஸ்ஸ

பேராயர்மெல்கம்கர்தினால்ரஞ்சித்ஆண்டகையின் ஆதங்கம் நியாயமானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்று இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேராயர்மெல்கம்கர்தினால்ரஞ்சித்ஆண்டகையின் அறிவிப்பினை எதிர்மறையான ஒரு விடயமாக நாம் பார்க்கவில்லை. அவரால் தெரிவிக்கப்படும்



விடயங்கள் நியாயமானவையாகும். எந்தவொரு

## தேசபந்துவின் சொத்துக்களை பட்டியலிடும் பணிகள் ஆரம்பம்

முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்ன கோனின் சொத்துக்களை அடையாளங்காணும் மற்றும் பட்டியலிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காகச் சில குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே முன்னாள் பதில்



பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனைகைதுசெய்வதற்கான ஒன்றிணைந்த சுற்றிவளைப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதில் பொலிஸ் மா அதிபரின் நேரடி கண்காணிப்பில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ☞ 2

### லலித், குகன் காணாமலாக்கப்பட்ட வழக்கில்

## யாழ். நீதிமன்றில் கோட்டா; மீள்பரிசீலனைக்கு உத்தரவு

### உயர் நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது

**காணாமற்போனோர்தொடர்பான வழக்கு ஒன்றில் கோட்டாபய ராஜபக்சவைமுன்னிலையாகுமாறு விடுக்கப்பட்டஅழைப்பாணையை நிறுத்திமேன்முறையீட்டுநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை மீண்டும் பரிசீலிக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.**



☞ 2

### திங்கள் இரவு கிராண்ட்பாஸில்

## பாதாள உலக குழுக்கள் சூட்டதில் இருவர் காயம்

கிராண்ட்பாஸ், நாகலகம் வீதி பகுதியில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், இரண்டு குற்றக் கும்பல்களுக்கு இடையிலான மோதலால் ஏற்பட்டது என இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் ☞ 8

## மியான்மரில் சிக்கியிருந்த 14 இலங்கையர்கள் மீட்பு

மியன்மாரின் மியாவடியில் உள்ள இணையக் குற்றவியல் மையங்களில் வலுக்கட்டாயமாக பணியமர்த்தப்பட்ட 14 இலங்கையர்கள் மீட்கப்பட்டு நாடு திரும்பியுள்ளனர்.

மியன்மார் மற்றும் தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து, மியன்மார் மற்றும் தாய்லாந்து அரசுகளின் ஆதரவுடன், அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக ☞ 8

## பட்டலந்த அறிக்கை மீதான நடவடிக்கைகளை சட்ட அமுலாக்க நிறுவனங்களே தீர்மானிக்கும்

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

பட்டலந்தஅறிக்கையைஅடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கையை ஆளும்தரப்புத் தீர்மானிக்கப் போவதில்லை. மாறாக சட்டஅமுலாக்கநிறுவனங்களே அதனைத் தீர்மானிக்கும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று அல் ஜசீரா நேர்காணலில் தெரிவித்திருந்தார். எனவே, அது செல்லுபடியாகாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். எனவே தான் மும்மொழிகளிலும் அந்த அறிக்கையை நாம் நாடாளுமன்றத்தில் ☞ 8

## சுகாதார தொழிற்சங்கங்கள் 24 மணி நேர பணி நிறுத்தம்

கொடுப்பனவு குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 19 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று காலை 7 மணி முதல் இன்று காலை 7 மணி வரை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

அடையாளவேலைநிறுத்தத்தில் ஈடுபட்டாலும் அத்தியாவசிய மற்றும் அவசர சேவைகள் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 8

## இலங்கை – இந்தியா இடையே எப்போது பாலம் அமையும்?

### சிறீதரன் எம்பியின் கேள்வி இது

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எப்போது பாலம் அமைக்கப்படும், அவ்வாறு அமைக்கப்பட்டால் அதனால் இலங்கைக்கு கிடைக்கும் சாதகமான பலன்கள் என்ன? இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள பணிகள் என்ன? வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரியாணி உட்பட சாப்பாட்டு கடைகளை திறப்பதால் இளைஞர்களுக்கு நிலையான தொழில்கள் கிடைக்காது. சிறந்த தொழில் வாய்ப்பு திட்டங்களை



அமுல்படுத்துங்கள் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சபையில் ☞ 8

## விமானப்படைச் சிப்பாய் வெடிபொருளுடன் கைது

விமானப்படைச் சிப்பாய் உள்ளிட்ட இருவர் வெடிப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் பயணித்த வாகனம் ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி செயலகத்துடன் இணைக்கப்பட்ட விமானப்படைப் ☞ 2

## கோட்டாவின் உத்தரவிற்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு

2020ஆம்ஆண்டுஹெரோயின்போதைப்பொருள் வைத்திருந்த சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட பெண்ணொருவரை, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை ☞ 2

## இனி இது .....

அந்தளவிற்கு அரசபடையினருக்கும் குற்றச் செயல்களுக்கும் இடையிலான தொடர்பு இருக்கின்றது. போர் இருக்கும் வரைக்கும் இந்தக்குற்றங்கள்எல்லாவற்றையும்அவர்கள் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தி வந்தார்கள். அதைப் பார்க்கக் கேட்க ஆளிருந்தி-ருக்காத காரணத்தால் இன்று அதன் விளைவுகளைத் தெற்கு அனுபவிக்கிறது.

அக்குரஸ்ஸ பொதுச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ளநகைக்கடையில்ஒன்றுமூன்று தங்கநெக்லஸ்களைத்திருடிக்கொண்டுஒருவர் தப்பியோடியுள்ளார் கடை உரிமையாளரும் பணியாளர்களும் அவரைத் துரத்திச் சென்று பிடித்து, பொலிஸாரிடம்ஒப்படைத்தனர். நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்நிகவெரட்டியபகுதியைச்சேர்ந்த 35 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. அவர் இராணுவத்தைச் சேர்ந்தவரா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

...................................

வேலியேபயிரைமேய்ந்திருந்தாலும்அது பிரச்சினைதான்என்பதற்கான உதாரணமாக ஒரு வழக்கு வந்திருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன்பு வெலிகந்த பொலிஸார் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட 20 கால்நடைகளைக் கைப்பற்றியிருந்தனர். இரண்டு சந்தேகநபர்களும்கைதுசெய்யப்பட்டிருந்தனர். நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைத்து நீதிவான்கால்நடைகளைஅரசபண்ணையில் ஒப்படைக்க உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் அந்தக் கால்நடைகள் அரச பண்ணையில் ஒப்படைக்கப்படாமல் கடத்தல்காரர்களிடமே மீண்டும் விற்கப்பட்டுவிட்டன என்று நீதிவானின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதையடுத்துவெலிகந்தபொலிஸ்நிலையத்தின் முன்னாள்பொறுப்பதிகாரியைக்கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு பொலன்னறுவை நீதிவான் அன்சார் சதாத் உத்தரவிட்டுள்ளார். சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டது.

கலிகாலம் என்று இதைத்தான் சொல்லுவார்கள் போலும்.

...................................

இது தேர்தல் காலம். வேட்புமனுத் தாக்கலுக்கு இன்றும் நாளையும்தான் கால அவகாசம் இருக்கின்றது. வேட்புமனுத் தாக்கலின்போது எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும் சிறு சிறு தவறுகள் ஆங்காங்கே எப்படியாவது ஏற்படத்தான் செய்கின்றன. இது பதற்றத்தை ஏற்படுத்தக்கூடியது. அந்தப் பதற்றத்தைக் கையாளத் தெரியாவிட்டால் சிறைக்கம்பிகளைஎண்ணவேண்டியிருக்கும் என்பது அரசியல்வாதிகளுக்கான எச்சரிக்கை.

குருநாகல் துணைத் தேர்தல் ஆணையாளரின்கடமைகளுக்கு இடையூறுவிளைவித்த குற்றச்சாட்டின் பேரில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஒப்படைக்க வந்த முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டிருக்கின்றார் குருநாகல் பொலிஸார் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் குளியாப்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவர். உள்ளூராட்சிமன்றத்தேர்தலுக்காகஇலங்கை சோசலிசக் கட்சி சமர்ப்பித்த வேட்புமனுவில் குறைபாடுகள் இருந்ததால், குருநாகல் உதவித் தேர்தல் ஆணையர் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளருடன் வந்த முன்னாள் தலைவர், இந்த நிராகரிப்பு தொடர்பாக துணைத் தேர்தல் ஆணையருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தினார். உடனடியாகபொலிஸாருக்குத்தகவல்தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் வந்து அரசியல்வாதியைஅள்ளிச்சென்றுவிட்டார்கள். ஆக மொத்தத்தில் இன்னும் நாளையும் 'சனி' பகவான் நாக்கில் இருக்கிறாரா என்பதை கவனத்தில் கொண்டு செயற்படுமாறு அரசியலாளர்கள்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## யாழ். .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2011 ஆம் ஆண்டு காணாமலாக்கப்பட்ட மனித உரிமை ஆர்வலர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோரின் வழக்குத் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் காணாமலாக்கப்பட்டபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவரான கோட்டாபய ராஜபக்சவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறுயாழ்ப்பாணம்நீதிவான் மன்றம் அழைப்பாணை பிறப்பித்திருந்தது. அதற்கு எதிராக கோட்டாபய ராஜபக்சவால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் அழைப்பாணையை நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள்மேன்முறையீட்டுநீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் சோபித ராஜகருணா மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது, வழக்காளிகளின் மனுவை மீண்டும் பரிசீலிக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்திக்குநீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

லலித் குமார் வீரராஜ்: 'நாங்கள் இலங்கையர்கள்' அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் ஜன அரகலயா (மக்கள்போராட்டம்) இயக்கத்தின்யாழ்ப்பாண ஒருங்கிணைப்பாளர். வடக்கிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலைக்காகவும், மனிதஉரிமைமீறல்கள், குறிப்பாக கட்டாயமாக காணாமல் போதல்கள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தும் போராட்டங்களை ஏற்பாடு செய்வதிலும் அவர் தீவிரமாக ஈடுபட்டார்.

குகன் முருகானந்தன்: வீரராஜின் மனித உரிமை பரப்புரைகளுக்கு உதவியவர், குறிப்பாககட்டாயமாககாணாமல்போனவர்கள் மீது கவனம் செலுத்தினார்.

டிசம்பர் 9, 2011 அன்று, இருவரும் கடைசியாக யாழ்ப்பாணத்தின் ஆவரங்கலில் உள்ள முருகானந்தனின் இல்லத்திலிருந்து மாலை 5:00 மணியளவில் ஒரு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டனர். அடுத்த நாள், சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று, கொழும்பில் தமிழ் பொதுமக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்தும், போர் முடிவடைந்ததிலிருந்து குற்றச்சாட்டுகள் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்கக் கோரியும் ஒரு ஆர்ப்பாட்டத்தை அறிவிக்க அவர்கள் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.

வீரராஜும்முருகானந்தனும்பருத்தித்துறை பிரதானசாலையில்மோட்டார்சைக்கிள்களிலும் வெள்ளை வேனிலும்வந்த ஒருகுழுவினரால் கடத்தப்பட்டனர்என்றுசாட்சிகள்தெரிவித்தனர்.

அவர்கள் காணாமல்போன சிறிது நேரத்திலேயே குடும்பங்கள் உள்ளூர் பொலிஸ் நிலையங்களில் முறையிட்டனர். முருகானந்தனின் குடும்பத்தினர் டிசெம்பர் 10, 2011அன்று அச்சுவேலி பொலிஸ்நிலையத்தில் முறையிட்டனர். அதே நேரத்தில் வீரராஜின் தந்தை டிசம்பர் 11, 2011 அன்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

2024ஆம் ஆண்டில், முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச பாதுகாப்பு கவலைகளை காரணம் காட்டி, யாழ்ப்பாணம் நீதிவான் மன்றத்தைத் தவிர வேறு எந்த நீதிமன்றத்திலும் இந்த வழக்கு தொடர்பாக சாட்சியமளிக்க விருப்பம் தெரிவித்தார். இலங்கைக்குள் உள்ள பிற நீதிமன்றங்களில் சாட்சியங்களை வழங்க அவர் தயாராக இருக்கிறார் என்று அவரது வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

## தேசபந்துவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கைக்கு புலனாய்வு பிரிவின் ஒத்துழைப்பும்பெறப்பட்டுள்ளதாகபொலிஸார் தெரிவித்தனர்.

தேசபந்து தென்னகோன் கைது செய்யப்படாமல்தலைமறைவாக இருப்பதற்கு உதவுபவர்களும்கைதுசெய்யப்படவுள்ளனர்.

## விமானப்படைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு பயன்படுத்துவது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட விமானப் படைச் சிப்பாயும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இணைக்கப்பட்ட ஒருவர். 34 வயதானவர். மற்றைய நபர் களனி, கோனாவல பகுதியைச் சேர்ந்தவர். 60 வயதுடையவர்.

# எப்போது வேலைவாய்ப்பு என்று பட்டதாரிகளுக்குத் தெரிவியுங்கள்

## எதிர்க் கட்சித் தலைவர் ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

தேர்தல்காலத்தில்அளித்தவாக்குறுதியை ஆளும்தரப்பு நிறைவேற்றவேண்டும் என்பதை நோக்காகக் கொண்டே வேலையற்றபட்டதாரிகள் நாடாளுமன்ற சுற்று வட்டாரத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனால்வேலையற்றபட்டதாரிகளுக்கு தொழில் வழங்க முடியுமான உறுதியான காலவரையறையை ஆளும்தரப்பு தெரிவிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் பக்கம் 72இன் பிரகாரம் 20 ஆயிரம் பட்டதாரிகளை ஆசிரியர் தொழிலுக்கு உள்ளீர்த்தல், தகவல் தொழிநுட்பதுறையில்3000 பட்டதாரிகள் மற்றும் 9000 விஞ்ஞான, தொழிநுட்ப, கணித பட்டதாரிகளை உள்ளீர்த்தல், உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு, சுங்கத் திணைக்களத்திற்கு, வெளிநாட்டுச் சேவைக்கு, சுற்றுலாகைத்தொழிற்றுறைக்கு மேலும் 3000 பேரை உள்ளீர்ப்போம் என வாக்குறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

கூறியவாறு தொழில் கிடைக்காத காரணத்தினால் இரண்டு நாள்களாகப் பட்டதாரிகள் பொல்துவ சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி கூறியது போலவும், தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளபடியும், தொழில் வழங்கும் தினம் குறித்து குறிப்பிட்ட கால அட்டவணையை வழங்க முடியுமாக இருந்தால், பொல்துவ சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு குறிப்பிட்ட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க முடியுமாக இருந்தால் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட மாட்டார்கள்.

2025ஆம் ஆண்டு வேலையில்லாப் பட்டதாரிகளின் பொற்காலம் என்று தற்போதைய ஆளுந்தரப்பினரால் இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்டு வந்தது. ஆனால், இதற்கான ஏற்பாடுகள் எதனையும்இதுவரையில்காணக்கூடியதாக இல்லை. அதனால் தொழில் வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் சரியான காலப் பிரிவு மற்றும் வேலைத்திட்டத்தை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்'என்றார்.

# துப்பாக்கி வெடித்து பொலிஸார் காயம்

(பாறுக் ஷிஹான்)

கைத்துப்பாக்கி திடிரென வெடித்ததில் காயமடைந்த பொலிஸ் அலுவலர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

சம்பவம் அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்தவர் 39 வயதான நல்லதம்பி நித்தியானந்தன். அவரது வலது காலில் துப்பாக்கி ரவை துளைத்துச் சென்றுள்ளது.

கடமை நிமிர்த்தம் துப்பாக்கியை பெற்றுக்கொள்வதற்கு ஆயுத களஞ்சியத்திற்கு பொறுப்பான அலுவலரிடம் இருந்து பிஸ்டல் ரக துப்பாக்கியைப் பெற்றபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுதக் களஞ்சியத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் குறித்த கைத்துப்பாக்கியை பரிசீலனை செய்வதற்காகமேசையில்வைத்தவேளைஅது தவறுதலாக வெடித்தது என்று ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் ஆலோசனையில் காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜெகத் வழிகாட்டுதலில் போலீசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அருச்சுனா எம்.பி. மீது சபாநாயகர் நடவடிக்கை

## பாயும் என அமைச்சரவை பேச்சாளர் நம்பிக்கை

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ச்சுனா மீது சபாநாயகர் நடவடிக்கை எடுப்பார் என்று ஆளும்தரப்பு எதிர்பார்ப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ நேற்றுத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்திர மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சமீபத்திய நாடாளுமன்றக் கூட்டத்தொடரின்போது மனித உரிமைகள் வழக்கறிஞர் சுவஸ்திகா அருள்லிங்கத்திற்கு எதிராக பாலியல் ரீதியான இழிவான கருத்தை வெளியிட்டதற்காக, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

அதேவேளை, நாடாளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கவும், நாடாளுமன்ற சிறப்புரிமைகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இனவெறி அறிக்கைகளை வெளியிடுவதைத் தடுக்கவும் சபாநாயகர் நடவடிக்கைஎடுப்பார்என்றுஎதிர்பார்ப்பதாகவும் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்காக அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்ட தடுப்புக் காவல்உத்தரவுமுற்றிலும்சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

இந்த அடிப்படை மனித உரிமைகளை மீறியமைக்காக, இலங்கைஅரசு மனுதாரருக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்என்றும்தீர்ப்பில்குறிப்பிடப்பட்டது.

பேலியகொட சிறப்பு விசாரணைப் பிரிவினால்கைதுசெய்யப்பட்ட, ஹேனகம, பொகுனுவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் காஞ்சனா பிரியதர்ஷனி மதுரப்பெரும என்ற பெண் சமர்ப்பித்த அடிப்படை உரிமைகள் மனுவின் மீது தீர்ப்பை வழங்கிய உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

காலைக்கதிர்
Kalaikkathir

# அரச திணைக்களங்கள் இரண்டினால் வடக்கு மாகாணத்துக்கு அதிக பாதிப்பு

## ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்

வனவளத்திணைக்களம், வன உயிரிகள் திணைக்களத்தால் வடக்குமாகாணவ; அதிகமான பாதிப்புகளை சந்தித்துள்ளது இவை தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு அதிகளவான நிதி பல்வேறு வகையிலும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை வினைத்திறனாகவும், ஒருங்கிணைந்தும், விரைவாகவும் நிறைவேற்றுவது தொடர்பாக கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் இ.சந்திரசேகரன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் இணைத் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வனவளத்திணைக்களம், வன உயிரிகள் திணைக்களத்தால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பாதிப்பு இருந்தாலும் வடக்கு மாகாணத்தில் அதிகூடிய பாதிப்பு இருப்பதாகக் குறிப்பிட்டார்.

மக்களின் மீள்குடியமர்வு, விவசாயம், அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு இடையூறாக இந்த இரு திணைக்களங்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

வடக்கு மாகாணம் கால்நடை உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த நிலையில் உள்ளபோதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரவைகள் இல்லாமல் இருப்பது பெரும் பின்னடைவு சட்டவிரோதமான மணல் அகழ்வு மிகப்பெரிய பிரச்சினையாகவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்றும், ஆளணிகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் அமைச்சர் மற்றும்நாடாளுமன்றஉறுப்பினர்களும்ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லவேண்டும். - என்றார்.





# வவுணதீவில் விவசாயிகள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு கண்டியனாறு, அடைச்சகல் ஆகிய குளங்களைப் புனரமைக்குமாறும் வருடாவருடம் ஒதுக்கப்படும் 3 ஆயிரம் கோடி ரூபாவிற்கு நிரந்தரமாக விவசாய வாய்க்கால்களைப் புனரமைக்குமாறு அரசாங்கம் மற்றும் விவசாய திணைக்களத்திடம் கோரி விவசாயிகள் வவுணதீவு பிரதேச செயலகத்தின் முன்னால் நேற்று (செவ்வாய்க்கிழமை) கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச விவசாயிகள் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்ததையடுத்து நேற்று காலை 9 மணிக்கு வவுணதீவு பிரதேச செயலக்தின் முன்னால் விவசாயிகள் ஒன்று திரண்டனர்.

இதனையடுத்து மாகாண நீர்ப்பாசன திணைக்களமே வெளிப்படையாக வேலைகளைச் செய், கண்டியனாறு திட்டத்தை கைவிடப்பட்டதா? அரசாங்கத்தின் நிதியை பசளை மானியம் நஷ்டஈடு என விரயம் செய்யவா அரச அதிகாரிகள்? ஏன் எமது இளைஞர் யுவதிகள் வெளிநாடு செல்லவேண்டும், மாகாண நீர்ப்பாசன திணைக்களமே? உப்பாற்றில் வீணாகச் செல்லும் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தத் திட்டங்களைத் தீட்டு, 1600 ஏக்கர் விவசாய காணி 4000 ஏக்கர் மேட்டுக்காணிகளுக்கு நீர் வழங்குவதற்கு ஏன் தயக்கம், விவசாயிகளை பிரித்தாலும் தந்திரம் வேண்டும், இராஜாங்க அமைச்சரின் அராஜகம் ஒழிக? , பிரதேச அபிவிருத்தியின் நிலை என்ன பிரதேச செயலாளரே? மாவட்டத்தில் வெள்ள நிவாரணம் வழங்குவதே அதிகாரிகளின் கடமையா? விவசாயிகளே விழித் தெழுங்கள் போன்ற வாசகங்களை ஏந்தியவாறு சுமார் ஒருமணிநேரம் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.






# அம்பாறை மாவட்ட தபால் சேவைகளும் தொழிற்சங்கப் போராட்டத்தால் முடக்கம்

(பாறுக் ஷிஹான்)

நாடளாவிய ரீதியில் தபாலக தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல உப தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உப தபால் நிலைய அஞ்சல் அதிபர்கள் ஊழியர்கள் ஆதரவளித்தமையால் தபால் அலுவலக சேவைகள் யாவும் இருநாள்களாக முடங்கியுள்ளன.

இதன்படி கடந்ததிங்கட்கிழமை உட்பட அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதான தபாற்கந்தோர் தவிர 7 தபால் நிலையங்கள் குறித்த பணி பகிஸ்கரிப்பு காரணமாக மூடப்பட்டிருந்ததுடன் அம்பாறை மாவட்ட பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.








# இலங்கை வங்கியினது ஓய்வூதியர் மதிப்பளிப்பு

இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை வங்கி வடமாகாண அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தலைவர் வி. தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் வி. சிவானந்தன் பிரதம விருந்தினராகவும் செயற்பாட்டு முகாமையாளர் கு. சிவஞானசுந்தரம் சிறப்புவிருந்தினராகவும் இலங்கை வங்கியின் தாய்ச்சங்க பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

மூத்த ஓய்வூதியர் கௌரவிப்பில் ஓய்வுநிலை பிரதம முகாமையாளர் திரு எஸ். விக்னராஜா, விதவைகள் - அநாதைகள் ஓய்வூதியர் திருமதி சிதம்பரநாதன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பட்டலந்த சிக்கல்

சில வாரங்களுக்கு முன்பு, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, அல்ஜசீரா பத்திரிகையாளர் மெஹ்தி ஹசன் நேர்காணல் செய்ததைத் தொடர்ந்துதான் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மீண்டும் பேசுபொருளானது. அந்த அறிக்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினராக அடையாளப்ப டுத்தப்படுபவர்கள் தற்போதைய ஆளும்தரப்பினராக இருப்பதன் காரணமாக இந்த விவகாரம் உடனடியாகவே பூதாகாரமானது. அதே நேர்காணலில் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்தும் பெருமளவில் ஆராயப்பட்டபோதும் அது பேசுபொருளாகவில்லை என்பது கவனத்திற்குரியது.

பட்டலந்த ஜனாதிபதி விசாரணை ஆணையத்தின் அறிக்கை குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, விக்கிரமசிங்க வழக்கமான பாணியில் அத்தகைய அறிக்கை ஒன்று இல்லை என்றார். அது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படாத காரணத்தால் அப்படிப்பட்ட ஒரு அறிக்கை இல்லை என்றார். ஜூரர்களில் ஒருவராக இருந்த பிபிசி முன்னாள் பத்திரிகையாளர் பிரான்சிஸ் ஹாரிசன் ஆச்சரியத்துடன் எதிர்வினையாற்றி அறிக்கையின் நகலை அசைக்கத் தொடங்கியபோது, விக்கிரமசிங்க விரைவாக, அது ஒருபோதும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படாததால் அது செல்லுபடியாகாது என்று கூறினார்.

சரி, அந்தக் கருத்துக்குச் சில வாரங்களுக்குப் பிறகு, கடந்த வாரம் அறிக்கை அதிகாரப்பூர்வமாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. பொருத்தமான நடவடிக்கைக்காக இது சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும் என்றும் ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. அதன் பின்னரும் அந்த அறிக்கையை நிராகரிக்க ரணில் தயங்கவில்லை.

மனித உரிமை மீறல்கள் முதல் சித்திரவதை மற்றும் படுகொலைகள் வரை கடுமையான குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும், தானே நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கை மீது முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா எந்த நடவடிக்கைகயையும் எடுத்திருக்கவில்லை.

'பட்டலந்தா வீட்டுவசதித் திட்டத்தில் சட்டவிரோத தடுப்பு மற்றும் சித்திரவதை முகாமை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் குறித்த விசாரணை ஆணையத்தின் அறிக்கை' இறுதியாக மாசி 19, 2000 அன்று அரசுத் தலைவர் சந்திரிகாவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், அறிக்கை ஒருபோதும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. உண்மையில், ஐக்கிய தேசியக் கட்சி (ஹீஹிஊண) தனது தாயார், முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு செய்ததைப்போன்று, பழிவாங்கல் செயல்களில் தான் ஈடுபட விரும்பவில்லை என்ற நிலைப்பாட்டை குமாரதுங்க எடுத்தார், அது அறிக்கையின் முடிவுகளில் இருந்த தீவிரத்தை சுட்டிக்காட்டியது.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, முன்னர் இளைஞர் விவகார அமைச்சராகவும், பின்னர் விசாரணைக் காலத்தில் தொழில்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர். அரச உர உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கீழ் செயல்பட்ட பட்டலந்தா சாலை வசதி மற்றும் வீட்டுத் திட்டம், விக்கிரமசிங்கவின் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் வந்தது, உண்மையில் அவரது அமைச்சர் அலுவலகம் மற்றும் அதிகாரப்பூர்வ பங்களா அந்த வளாகத்தில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. கூடுதலாக, கம்பஹா மாவட்டத்தின் பியகம தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், அந்தப் பகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

2000 ஆம் ஆண்டில் அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து, கடந்த ஆண்டைப் போலவே, கடந்த ஆண்டிலும்கூட, தேர்தல் மேடைகளில் படலந்தா ஒரு முக்கிய விஷயமாக இருந்தது. ஆனால் சர்ச்சைக்குரிய அல் ஜசீரா நேர்காணலைத் தொடர்ந்து, புதிய தேசிய மக்கள் சக்தி (ஹிஊணஊண) ஆளும்தரப்பு அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளது. இருப்பினும், 25 ஆண்டுகால தொடர் கதையின் சமீபத்திய அத்தியாயத்தின் விளைவாக யார் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பது பெரிய கேள்வி,

இந்த அறிக்கை இருபுறமும் வெட்டக்கூடிய இரட்டை முனைகள் கொண்ட வாள் என்பதை தேசிய மக்கள் சக்தி புரிந்துகொள்ளவேண்டும். படாலாண்டா வீட்டுவசதித் திட்டத்தில் கடுமையான குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டவர்களை இலக்கு வைக்கும் அதேநேரம் இன்றைய ஆளும்தரப்பின் முதுகெலும்பான ஜேவிபியின் குற்றங்கள் தொடர்பிலும் இந்த அறிக்கை பழையவற்றைக் கிளறும். இது கடுமையான அரசியல் ஆபத்து.

'ஒரு நல்ல நெருக்கடியை ஒருபோதும் வீணாக்க விடாதீர்கள்' என்று ஒரு முறை கூறியவர் வின்ஸ்டன் சர்ச்சில். அவரது தீவிர ரசிகரான விக்கிரமசிங்கே இந்த அறிக்கை மூலம் தனக்கு ஏற்படக்கூடிய சிக்கலில் இருந்து வெளியேறும் வழியைத் திட்டமிட்டுக்கொண்டிருக்கவேண்டும். அவர் அதில் தவறிவிட்டார்.

இருப்பினும், மிகப்பெரிய கேள்வி என்னவென்றால், தேசிய மக்கள் சக்தியின் முக்கிய அங்கமான ஜேவிபியால், 2005 ஆம் ஆண்டிலேயே இதைச் செய்திருக்க முடிந்திருக்கும்போது ஏன் இவ்வளவு காலம் காத்திருந்தது என்பதுதான், அப்போது அது நாடாளுமன்றத்தில் சுமார் 39 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது மற்றும் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான முதல் நிர்வாகத்தின் முக்கிய கூட்டணி பங்காளியாக இருந்தது, சக்திவாய்ந்த அமைச்சர் பதவிகளையும் பெற்றது. மூன்று வாரங்களுக்குமுன்பு அல்ஜசீரா இந்த பிரச்சினையை முன்னிலைப்படுத்தும் வரை, கடந்த 25 ஆண்டுகளில் அறிக்கையின் கண்டுபிடிப்புகளை அம்பலப்படுத்த ஜேவிபி எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

இருப்பினும், இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், இந்த விடயத்தில் ஒரு தரப்பினரை தவிர்த்து மற்ற தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்பதுதான். குமாரதுங்கவின் மறைந்த கணவர் விஜயா உட்பட, அரச எதிர்த்துப் போராடிய ஒரே குற்றத்தைச் செய்த ஆயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும், பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வெறும் புள்ளிவிவரங்களுக்கு மட்டுப்படுத்தப்படக்கூடாது.

# உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முக்கியத்துவம்

**உபுல் யோசப் பெர்னான்டோ**

1956 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கும் 2024 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கும் இடையே ஒரு ஒற்றுமை உள்ளது. 1947 முதல் நாட்டை ஆண்ட ஐ.தே.க., 1956 பொதுத் தேர்தலில் துடைத்தெறியப்பட்டது. அது எதிர்க் கட்சித் தலைமையையும் இழந்தது. இலங்கை வரலாற்றில் முதல் முறையாக, ஒரு புதிய கட்சி ஆட்சிக்கு வந்தது.

புதிய ஆளும்தரப்பில் சக்திவாய்ந்த அமைச்சராக இருந்த பிலிப் குணவர்தன, ஐ.தே.க.வின் சவப்பெட்டியில் இறுதி ஆணி அடிக்கப்பட்டது என்று கூறினார். இலங்கையில் பாரம்பரியகட்சிகளை அழித்து ஜே.வி.பி. 2024இல் வெற்றி பெற்றது. 1956 இல் பண்டாரநாயக்க ஆளும்தரப்பு முற்றிலும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் உருவாக்கப்பட்டது. 2024இல் அநுர ஆளும்தரப்பும் முற்றிலும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் உருவாக்கப்பட்டது.

2024 பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இலங்கையில் பாரம்பரிய கட்சிகளும் பாரம்பரிய அரசியலும் முடிந்துவிட்டன என்று அனைவரும் நினைத்தார்கள். 1956 பொதுத் தேர்தலுக்குப் பிறகும் அனைவரும் அப்படித்தான் நினைத்தார்கள். ஆனால் 1956 டிசெம்பரில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலுடன் எல்லாமும் மாறியது.

ஐ.தே.கவுக்கு ஒரு தலைவர்கூட அப்போது இருக்கவில்லை. ஐ.தே.கவின் முன்னாள் தலைவர் டட்லி அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார். ஐ.தே.கவின் தலைவர் சேர் ஜோன் கொத்தலாவல அரசியலில் இருந்து ஓய்வு பெற திட்டமிட்டு லண்டனுக்குக் குடிபெயர்ந்தார்.

அரசியல் களத்தில் ஐ.தே.க. அப்போது அரசியல் பலமேதுமின்றி நான்கு கால்களில் தவழ்ந்துகொண்டிருந்தது. அப்போதுதான் 1956 உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. அந்த நேரத்தில், ஐ.தே.க. தனது கால்களில் நிமிர்ந்து நிற்க ஜே.ஆர். ஊக்கமளித்தார். இந்த விடாமுயற்சியில் ஜே.ஆருடன் இணைந்து நின்ற ஒரே மனிதர் கொழும்பு முன்னாள் துணை மேயர் ரணசிங்க பிரேமதாச ஆவார். பண்டாரநாயக்கவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆளும்தரப்பையும் மக்களையும் ஆச்சரியப்படுத்தும் வகையில், கொழும்பு மாநகர சபையை ஐக்கிய தேசியக் கட்சி வென்றது.

ஜே.ஆர். தனது புத்தகத்தில் ஐ.தே.கவின் அந்த வெற்றியை சாம்பலில் இருந்து எழுந்த பீனிக்ஸ் பறவைக்கு ஒப்பானதாக விவரிக்கிறார். இலங்கையின் உள்ளாட்சித் தேர்தல்களின் வரலாற்றில், நாட்டையே உலுக்கிய ஒன்று 1956 உள்ளாட்சித் தேர்தல். பண்டாரநாயக்க ஆளும்தரப்புக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளுக்கும் பாரம்பரியக் கட்சிகள் சவால் விடுத்த தேர்தல் அது,

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய அடுத்த உள்ளாட்சித் தேர்தல் 1991 தேர்தல். பிரேமதாச ஆளும்தரப்பு ஜே.வி.பி-யை அடக்கி தனது பலத்தை நிரூபித்துக் கொண்டிருந்த நேரத்தில் 1991 தேர்தல் நடைபெற்றது. பிரேமதாச ஜே.வி.பி-யை அடக்கி, இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்பியிருந்த நேரம் அது, ஒருபோதும் சாத்தியமற்றது என்று கருத்தப்பட்ட இந்த இரு விடயங்களையும் பிரேமதாச ஆளும்தரப்பு வெற்றிகரமாக முடித்திருந்த தருணம். அதனால் இந்த உள்ளாட்சித் தேர்தல் ஆளும்தரப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்று யாரும் நினைக்கவில்லை.

ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் ரஞ்சன் விஜேரத்ன அந்தக் காலப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டார், பிரேமதாசவின் நெருங்கிய உதவியாளரான சிறிசேன கூரே கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு மூன்று பெயர்கள் முன்மொழியப்பட்டன. முதல் பெயர் எம்.எச். முகமதுவின் மகன் ஹூசைன் முகமது. இரண்டாவது பெயர் கணேசலிங்கம். மூன்றாவது பெயர் பிரேமதாசவின் மற்றொரு உதவியாளரான ரத்னசிறி ராஜபக்சவினுடையது. சக்திவாய்ந்த அமைச்சரான லலித் அதுலத்முதலி, ஹூசைன் முகமதுவை ஆதரித்தார். ஹூசைன் ஒரு முன்னாள் மேயர் மற்றும் சபாநாயகர் எம்.எச்.முகமதுவின் மகன். பிரேமதாசவின் தேர்வு ரத்னசிறி ராபஜபக்ச. சிறிசேன கூரேவுக்கு ரத்னசிறியுடன் பிரச்சினைகள் இருந்தபோதிலும், பிரேமதாசவின் தேர்வை அவர் எதிர்க்கவில்லை. ரத்னசிறி மேயர் வேட்பாளரானார்.

ஹூசைன் முகமது தனது தந்தை எம்.எச். முகமதுவிடம் தனது வருத்தத்தைத் தெரிவித்தார். லலித்தும் முகமதுவுக்கு உத்வேகம் அளித்தார். இதன் விளைவாக 1991 செப்டம்பரில் பிரேமதாசவுக்கு எதிரான பதவி நீக்கத் தீர்மானம் வந்தது. அது கட்சியைப் பிளவுபடுத்தியது. 17 ஆண்டுகளுக்குப் பின்னர் ஐ.தே.கட்சியின் வீழ்ச்சிக்கான தொடக்கமாக அது அமைந்தது. 1991 உள்ளாட்சித் தேர்தலில் ஹூசைன் முகமது மேயராக நியமிக்கப்படாதது தோல்விக்கான விதையாக மாறியது. 1991 உள்ளாட்சித் தேர்தலை ஐக்கிய தேசியக் கட்சி முழு அளவில் வெற்றிகொண்டதுஎன்றபோதும் அதன் 17 ஆண்டு கால தொடர் ஆட்சிக்கு அந்தத் தேர்தல்தான் முடிவுரை எழுதியது என்றால் மிகையில்லை. 1994 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடாக ஐ.தே.கவைத் தோற்கடித்து சந்திரிகா ஆட்சியைப் பிடித்தார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் இடதுசாரிக் கட்சிகளிலிருந்தும் பிரிந்து தனிக் கூட்டணி அமைத்த சந்திரிகா மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்த முதல் தேர்தல் 1991 உள்ளூராட்சித் தேர்தல். ஆனால் அதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. பிரேமதாச ஆளும்தரப்பை யாராலும் கவிழ்க்க முடியாது என்று நம்பிய எதிர்க்கட்சி, உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தங்களை ஆறுதல்படுத்திக் கொண்டது. இருப்பினும், பிரேமதாச ஆளும்தரப்பை முடிவுக்குக் கொண்டுவரும் விளையாட்டு பிரேமதாச ஆட்சியின் அந்தத் தேர்தல் வெற்றியுடன்தான் தொடங்கியது என்பதை அவர்கள் அப்போது உணர்ந்திருக்கவில்லை. ஐ.தே.கவின் அந்த அற்புதமான வெற்றிக்குப் பின்னால் தோல்வியின் நிழல் இருப்பதை எதிர்க்கட்சிகளும் உணர்ந்திருக்கவில்லை.

அதுபோன்றே 2018 உள்ளாட்சித் தேர்தலும் நாட்டையே உலுக்கியது. 2018 உள்ளாட்சித் தேர்தல் காலத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட்டது, ராஜபக்சக்கள் பொதுஜன பெரமுனா என்ற புதிய கட்சியை உருவாக்கினர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிரிந்ததால், உள்ளாட்சித் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என்று அனைவரும் நினைத்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் என்றும், பொது ஜன பெரமுனா மூன்றாவது சக்தியாக மாறும் என்றும் கணிப்புகள் இருந்தன. ஆனால் முடிவுகள அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தின. புதிதாக உருவாக்கப்பட்ட பொது ஜன பெரமுனா அதிர்ச்சியூட்டும் வெற்றியைப் பெற்றது. இலங்கையில் உள்ளாட்சித் தேர்தல் வரலாற்றில் ஒருபோதும் உள்ளாட்சித் தேர்தலில் ஓர் ஆளும்தரப்பு தோற்கடிக்கப்பட்டதில்லை.

ஆளும்தரப்பு செயல்பட, உள்ளாட்சி நிறுவனங்களும் அதன் வசம் ஒப்படைக்கப்படவேண்டும் என்பதே பொதுவான கோட்பாடாகும். ஆனால் முதல் முறையாக, மக்கள் ஆளும்தரப்புக்கு தங்கள் எதிர்ப்பைக்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

## உள்ளூராட்சி ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

காட்ட உள்ளாட்சித் தேர்தலைப் பயன்படுத்தினர். தேர்தல் முடிவுகள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணிலின் சுதந்திரக்கட்சி – ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டு தோற்கடிக்கப்பட்டதைக் காட்டியது. இது அடுத்த தேர்தலிலேயே கோட்டாபய ஜனாதிபதி பதவிக்கு வர வழி வகுத்தது.

2018நடத்தப்பட்ட தேர்தல்2015இல்நடத்தப்பட்டிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருக்கும். 2015இல் உள்ளாட்சித் தேர்தலை நடத்தவேண்டாம் என்று மைத்திரிக்கு அறிவுறுத்தியது ரணில் எதிரானவர்கள்தான். அந்த நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் சுதந்திரக் கட்சி தோல்வியைச் சந்தித்திருந்தாலும் ராஜபக்சக்களின் அரசியல் ஒரு முடிவுக்கு வந்திருக்கும். அது நடக்காமல் தடுக்க மைத்திரிக்கு அறிவுறுத்திய ரணில் எதிர்ப்புத் தரப்பினர்தான் பின்னர் ரணிலுடன் சேர்ந்து, உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டாம் என்று ரணிலுக்கு அறிவுறுத்தினர்.

இப்போது உள்ளாட்சித் தேர்தலை விரைவில் நடத்தவேண்டும் என்று ஜேவிபி எடுத்த முடிவு சரியான அரசியல் முடிவு. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டாபய, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தியிருந்தால், ஒரு 'அரகலய' நடருந்திருக்காது. அந்த நேரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடந்திருந்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றுவிடும் என்று ராஜபக்சக்கள் அஞ்சினர். அது தமது குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டிவிடும் என்று கருதிய அவர்கள், அந்தத் தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித், ஐ.தே.க. மற்றும் ரணிலை பலப்படுத்திவிடும் என்ற அச்சத்தில் தேர்தலை நடத்தவில்லை.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, கோட்டாபயவின் ஆளும்தரப்பு அரசியல் ரீதியாகப் பலவீனமடைந்தது. நெருக்கடி வரும்போது அதை எதிர்கொள்ள, நெருக்கடிக்கு முன்னரே அரசியல் ரீதியாக வலுவடைந்து, எதிர்க்கட்சியை பலவீனப்படுத்த உள்ளாட்சித் தேர்தலை நடத்துவது அவசியம். ஜே.ஆர்., சந்திரிகா மற்றும் மகிந்த ஆகியோர் இந்த உத்தியையெ பின்பற்றினர். 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 'அரகலய' நடைபெறுவதற்கு முன்பு ஒரு உள்ளூராட்சித் தேர்தல் நடந்திருந்தால், ஜே.வி.பி.யினால் ஒரு சபையைக்கூட கைப்பற்றியிருக்கமுடியாது.

2023 இடைத் தேர்தலை ரணில் நடத்தியிருந்தால், ஜே.வி.பி. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உள்ளூராட்சி மன்றங்களைவென்றிருந்தாலும், ஐக்கியமக்கள்சக்தியைத் தோற்கடிக்க முடிந்திருக்காது. ரணிலைச் சுற்றியுள்ள ஆலோசகர்கள் இதை அறிந்திருந்தனர், அதனாலேயே உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு ரணிலுக்கு அறிவுறுத்தினர். ஜே.வி.பி அதைப் பயன்படுத்திக் கொண்டது.


இவற்றையெல்லாம் நோக்கும்போது உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்த ஜே.வி.பி. எடுத்த முடிவு சரியானது என்றே கூறலாம். இருப்பினும், இந்தத் தேர்தல் 1956, 1991 மற்றும் 2018 போன்ற நாட்டை மாற்றும் என்று சொல்ல முடியாது. அதேநேரம் இந்த உள்ளாட்சித் தேர்தலில் சபைகளின் ஆட்சியைப் பிடிக்க எவருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றால், இலங்கையின் அரசியலை மாற்றும் மற்றொரு தேர்தலாக அது அமைவதற்கு அதிகளவு சாத்தியங்கள் உள்ளன.

# சுகாதார தொழிற்சங்க நடவடிக்கையால் வவுனியாவில் நோயாளர்கள் பாதிப்பு

சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நாடளாவிய ரீதியில் மருந்தகங்கள், ஆய்வகங்கள், கதிரியக்க சேவைகள், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நல சுகாதாரம், கண் மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடும் சுகாதாரப் பகுதியினர் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி, வவுனியாவிலும் பணி பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக வவுனியாவில் பொது வைத்தியசாலைக்கு ஹெப்பிட்டிகொல்லாவ, பதவியா, உட்பட தூர இடங்களில் இருந்து வரும் 600இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியாமல் திரும்பிச்செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



குறிப்பாக, வவுனியா பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கு 600இற்கும் மேற்பட்ட நோயாளர்கள்உட்படமொத்தமாக 1000பேர்வரை நாளாந்தம் மருத்துவ தேவைக்காக வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





### மனித உரிமை பேரவையில்

# முன்னைய ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டிற்கு எந்த வகையிலும் மாறனதில்லை இந்த ஆட்சியும்

### நாடாளுமன்ற உரையில் மு.கா.தலைவர் ஹக்கீம் சுட்டிக்காட்டு

இந்த அரசாங்கம், மனித உரிமை பேரவையில் கடந்த கால அரசாங்கங்கள் கடைப்பிடித்த அதே நிலைப்பாட்டில் இருந்து பெரிதாக வேறுபட்டிருக்கவில்லை. அத்துடன்,காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு ஆகியன தொடர்பான விடயங்களை அரசாங்கம் தெளிவாகத் தெரிவித்திருக்க வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்ரவூப்ஹக்கீம்சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில்இடம்பெற்ற2025வரவு செலவுத் திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதானகுழுநிலைவிவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

கடந்த மாதம் 25ஆம் திகதி ஜெனீவாவில் இடம்பெற்ற 25ஆவது மனித உரிமை பேரவையில் எமது வெளிவிவகார அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார். கடந்த ஆண்டில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய பல்வேறு விடயங்கள் குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டிருந்தன.

ஆயினும், கடந்த கால அரசாங்கங்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் பெரிதாக வேறுபட்டிருக்கவில்லை. மனித உரிமை தொடர்பில் பல விடயங்களை அமைச்சர் கூறி இருந்தார். அவற்றை நாங்கள் வரவேற்கின்றோம்.

இலங்கை பொருளாதார ஸ்திரதன்மையற்றிருக்கின்றது. அதிலிருந்து மீள்வதற்குத் தேவையான வழிவகைகளைச் செய்துவருகின்றது என்பதை நாங்கள் அறிவோம். தமிழ் பேசும் பொலிஸாரை இணைத்துக்கொள்ளல், யாழ்நூலகம் போன்ற பல விடயங்களைத் தெரிவித்திருந்தீர்கள்.

ஆனால் ,அவை வெறும் அடையாளமாக மட்டுமே எமக்குத் தெரிகின்றது. அதிகாரிகளிடமிருக்கும் இழுத்தடிக்கும் காரியம் தொடர்பான செயற்பாட்டையே நீங்களும் வெளிப்படுத்தி இருக்கிறீர்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு போன்றவை தொடர்பான விடயங்களை அரசாங்கம் தெளிவாகத் தெரிவித்திருக்க வேண்டும்.

அத்துடன்,அவற்றின் நடைமுறைகள் தொடர்பில் தெரிவித்திருக்க வேண்டும். பொறுப்புக்கூறும் விடயம் காலதாமதாகியிருக்கின்றது. இது தொடர்பில் சர்வதேசம் அரசாங்கத்தைக் குற்றம் கூறியிருக்கின்றது.

மனித உரிமை ஆணைக்குழு மற்றும் இலங்கையில் மனித உரிமை செயற்திட்டம் தொடர்பில் உத்தியோகபூர்வ ஆவணம் ஒன்று வெளிவந்திருக்கிறது.

அது இணையத்தளத்தில் இருக்கின்றது. பிரஸ்தாப ஆணைக்குழுவின் செப்ரெம்பர் அமர்வுகளுக்காக தயாராகி வருவதாக அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

அக்காலப்பகுதியில் மனித உரிமை தொடர்பில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கையின் முன்னேற்றம் தொடர்பில் கூறுவதாகவும் தெரிவித்திருந்தார்.அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

ஆனால் தற்போது மனித உரிமை ஆணைக்குழுவால் வெளியிட்டிருக்கும் அறிக்கையை அரசாங்கம் பார்க்க வேண்டும்.

அதில் பல்வேறு தலைப்புகளில் பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. நீதி நியாயம் தொடர்பில் உறுப்பு நாடுகளின் நிலைப்பாட்டு தொடர்பில் கேட்கப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்திலான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளின் ஏற்பாடுகள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 51 (1) பிரேரணைக்காகவும் அரசாங்கம் தெரிவித்துள்ள கருத்து தொடர்பிலும் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கை ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். அதேபோன்று பொறுக்கூறும் விடயத்திற்கு அவர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அது தொடர்பானவிசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

# துணை வைத்திய நிபுணர்கள் கல்முனையில் வேலை நிறுத்தம்

சுகாதார நிபுணர்களின் சம்மேளனத்தின் தீர்மானத்திற்கு அமைவாக கல்முனை பிராந்திய சுகாதாரப் பிரிவில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையிலும் மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையிலும் கடமையாற்றுகின்ற துணை வைத்திய நிபுணர்கள் திங்கட்கிழமை காலை 07 மணி முதல் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வேலை நிறுத்தத்தால் நோயாளர்கள் மருந்தகத்தில் குளிகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதோடு, எக்ஸ் ரே எடுத்தலும் இடம்பெறவில்லை. இதன் காரணமாக நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக துணை வைத்திய நிபுணர்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமைக்கு எதிராகவே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைநிறுத்தத்திற்கு துணை வைத்திய நிபுணர்களின் கூட்டு சபையைச் சேர்ந்த 7 தொழிற்சங்கங்களும், இடைக்கால வைத்திய சேவைகள் கூட்டு முன்னணியைச் சேர்ந்த 11 தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.



# கனடாவில் இருந்து வந்தவர்கள் பயணித்த கார் யாழில் விபத்து

யாழ்ப்பாணம் - நாவற்குழி மாதா கோவிலடியில் திங்கட்கிழமை விபத்து இடம்பெற்றுள்ளது.

வேக கட்டுப்பாட்டை இழந்த கார், வீதியோரத்தில் உள்ள மாதா கோவிலின் மதிலுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இருப்பினும், இந்த விபத்தின்போது வாகனத்தில் பயணம் செய்த மூவருக்கும் எந்தவிதமான காயங்களும் ஏற்படவில்லை.

கனடாவில் இருந்து வந்த பெண் ஒருவர், அவரது கணவர் மற்றும் 5 வயது சிறுமி ஆகியோர் பயணித்த காரே இவ்வாறு விபத்தில் சிக்கியது.

நித்திரை கலக்கமே விபத்துக்கான காரணம் என தெரியவந்துள்ளதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# நகரசபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் திருகோணமலையில் பணிப்புறக்கணிப்பு

திருகோணமலை நகரசபை ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தார்கள்.

பொலிஸாரின் கைது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வேலை நேரத்தில் தமக்கான பாதுகாப்பை வலியுறுத்தியும் நகர சபையின் முன்பாக ஒன்று கூடி சில மணி நேரம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி மழை வெள்ளம் காரணமாக திருமலை - விகாரை வீதியின் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் உள்ள வடிகானை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் நகரசபை ஊழியர்கள் ஈடுபட்டபோது எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்து நகரசபை ஊழியர் ஒருவரை தாக்கியிருந்ததாகவும் பின்னர் அவ்விடத்திற்கு வருகைதந்த நாடாளுமன்ற



உறுப்பினர் ரொசான் அக்மீமன, நகரசபை செயலாளர் மற்றும் பொலிஸார் சமரசத்துடன் குறித்த விடயத்தை முடித்து வைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக திங்கட்கிழமை நகரசபை ஊழியர்கள் 5 பேர் திருகோணமலை தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக வரழைக்கப்பட்டு கைது செய்து திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் 5 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கைக்கு நீதி கோரியும் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் தாம் தமக்கு ஒதுக்கப்பட்ட கடமையை செய்கின்ற வேளைகளில் தொடர்ந்தும் தாக்கப்படுவதாகவும் இதனால் தங்கள் கடமையை செய்வதற்கு அச்சமாக இருப்பதாகவும் கடமையை செய்கின்ற நேரத்தில் தமக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் நகர சபை செயலாளரிடம் இதன்போது கையளித்தனர்.

## ஹற்றனில் மின்னல் தாக்கி மரம் முறிந்து மூவர் காயம்

(கிஷாந்தன்)

ஹற்றன், திம்புலபத்தனை, அகரீல் தோட்டத்தில் மின்னல் தாக்கி மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் 3 பேர் காயமடைந்துள்ளனர் என திம்புலபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

அகரீல் தோட்டத்தில் உள்ள ஆலமரம் ஒன்றே இவ்வாறு முறிந்து விழுந்துள்ளது.



இதன்போது, குறித்த மரத்தின் கிளைகள் லொறி மற்றும் வீடு ஒன்றின் மீது விழுந்துள்ளதால் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

லொறியின் சாரதி மற்றும் வீட்டின் சமையலறையில் இருந்த இருவரே காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.




காலைக்கதிர் Kalaikkathir

## பட்டலந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்திருக்கின்றோம்.

பட்டலந்த வீடமைப்புத் திட்டம், சட்ட விரோதமாகதடுத்துவைத்தல்,பிரதேசம்மற்றும் வதைமுகாம்தொடர்பானஆணைக்குழுவின் அறிக்கை சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையிலுள்ள காரணிகள் தொடர்பில் மேலும் ஆழமாக மதிப்பாய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. மேலும் இவ்வறிக்கை சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ள குழுவின் பரிந்துரைகள் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கையை ஆளும்தரப்பு தீர்மானிக்கப் போவதில்லை. மாறாக சட்ட அமுலாகக்க நிறுவனங்களே அதனைத் தீர்மானிக்கும்' என்றார்.

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தினார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று, வரவு செலவுத் திட்டத்தின் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றினார். அப்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் முதுகெலும்பாக இருந்த விவசாயத்துறை தற்போது வீழ்ச்சி யடைந்துள்ளது. உலகில்விவசாயத்துறையின் வளர்ச்சிதொழில்நுட்பங்களுடன்இடம்பெற்று வருகையில் இலங்கையில் அந்தத்துறை படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒரு காலத்தில் இலங்கையின் கைத்தொழில்துறையில்மசுகுளண்ணெய்யை இறக்குமதி செய்து அதனை எரிபொருளாக சுத்திகரித்து ஏற்றுமதி செய்து அதன் மூலம் வருமானத்தை பெற்றுக்கொண்டது. அதேபோன்று துணிகளை இறக்குமதி செய்து தைத்த ஆடை ஏற்றுமதியில் பொருளாதாரம் வளர்த்தது. ஆனால் இந்தத் துறைகள் மெல்ல மெல்ல வீழ்ச்சியின் போக்கிலேயே செல்கின்றன. வடக்கு மற்றும் கிழக்கில் இருந்த பல தொழிற்சாலைகள் இயங்காமல் திட்டமிட்டு முடக்கப்பட்டுள்ளன.

போர்முடிவடைந்தபின்னர்ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ தான் 13 பிளஸை தாண்டி இந்த நாட்டில் தீர்வொன்றை வழங்கப் போவதாக கூறினார். ஆனால் அவ்வாறாக தீர்வையும் கொடுக்கவில்லை. அவர் காலத்தில் அழிந்த கைத்தொழில் துறைகளைக் கட்டியெழுப்பவில்லை பொருளாதாரத்தில் முன்னேற்றங்களை ஏற்படுத்தமுனையவில்லை. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இப்போதும் மூடப்பட்டுள்ளது. அங்கிருந்த இரும்புகள் களவாடப்பட்டு சீமெந்து அத்திவாரங்கள் மட்டுமே உள்ளன. அவ்விடத்தில் சீமெந்து தொழிற்சாலையை உருவாக்கும் வசதிகள் உருவாக்கப்படவில்லை.

பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஒருகாலத்தில் ஆசியாவில் பிரபல்யமான தொழிற்சாலையாகும். இப்போது அவ்விடத்தில் தொழில் பேட்டையை உருவாக்குவதாக இந்த ஆளும்தரப்பு குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. 2015ஆம் ஆண்டில் ஆளும்தரப்புடன் சில விடயங்களில் இணைந்துப்போன காலத்தில் இந்தப் பிரேரணையை கிளிநொச்சியில் நாங்கள் முன்வைத்திருந்தோம்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் பரந்தனில் கைத்தொழில் பேட்டையை உருவாக்க வேண்டியதன் காரணத்தை முன்வைத்திருந்தோம். ஆனால் எவ்விதமான முன்னேற்றமும் இருக்கவில்லை.

இவ்விடத்தில் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹதுன்நெதியிடம் குறிப்பிடுவதானது, நீங்கள் வடக்கு மற்றம் கிழக்கில் அழிந்து போயுள்ள கைத்தொழிற்சாலைகளுக்குரிய கருத்திட்டத்தை கையில் எடுங்கள்.

அந்தந்த மாவட்டச் செயலர்கள் ஊடாக காணி, மூலப்பொருட்கள் அதற்கான நிதி தொடர்பான விடயங்களை எடுங்கள். அதேபோன்று இலங்கையில் தரமான உப்பை உற்பத்திசெய்த ஆனையிறவு மற்றும் குறிஞ்சா தீவு உப்பளங்கள் இருந்தன. ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பு மன்னாருக்கு போய் மாந்தை உப்பாகவே வெளிவருகின்றது. ஆனால் வெள்ளை உப்புக்கு பெயர்போன ஆசியாவில் மிகவும் தரம்வாய்ந்த உப்பு தொழிற்சாலையான குறிஞ்சாத்தீவு உப்பளம் இப்போதும் இயங்காமல் இருக்கின்றது.

இவ்வளவு காலமும் கண்ணிவெடிகளை அதற்குக் காரணமாகக் காட்டினார். இந்த இடத்திற்கு நான் நேரடியாக சென்று அதனை கம்பனியொன்றின் ஊடாக கொண்டுவர முயற்சித்ததுடன் இந்திய தூதரகத்துடனும் கதைத்தேன். இந்திய தூதரகம் அதற்கான சார்பு நிலைகளை கொண்டிருந்தது. இப்போதும் இந்திய தூதரகம் மற்றும் யாழ். துணைதூதரகம் என்பன குறிஞ்சாத்தீவு உப்பளத்தை எடுத்துச் செய்ய சாதகமான செய்தியைக் கூறுகின்றனர்.

அந்த அனுகுமுறையை கையாளுங்கள். அதன்மூலம் இரண்டாயிரம் தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும். அத்துடன்ஒட்டிச்சுட்டான்ஓட்டுத்தொழிற்சாலை விடுதலைப் புலிகள் ஆட்சிக் காலத்தில் மிகவும் திறமாக இயங்கியது. தமிழீழம் என்று பொறிக்கப்பட்ட ஓட்டின் தரம் எவ்வாறு இருந்தது என்பதனை இப்போதும் பார்க்கலாம். விடுதலைப் புலிகளின் தொழில்நுட்வம், அவர்களிடம் இருந்த பொருண்மிய அறிவு என்பன அளப்பரியது.

அதேபோல் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையை இயங்குவதற்கு 2015 -2019 நெதர்லாந்தில் இருந்து குழுவொன்று வரவழைக்கப்பட்டு மூவாயிரம் மில்லியன் ரூபாவை முதலீடு செய்ய முன்வந்தபோதும் அப்போதிருந்த ஆளும்தரப்பிலிருந்த சிலர் அதனைத் தடுத்துவிட்டனர்.

இவ்வாறான காகிதத் தொழிற்சாலை, ஓட்டுத் தொழிற்சாலை, உப்பளங்கள் இயங்கவில்லை, காங்கேசன்துறை தொழிற்சாலை இயங்கவில்லை.

இப்படி இருக்கையில் எப்படி இளைஞர்களுக்கு வேலை வழங்க முடியும். இளைஞர்கள் எப்படி விருப்பத்துடன் இங்கு இருப்பர். நாங்கள் முதலில் உற்பத்தி ரீதியில் வளர வேண்டிய நாடு கைத்தொழில்துறை மேலோங்கி வர வேண்டும்.

இலங்கைக்கும்இந்தியாவுக்கும்இடையில் எப்போது பாலம் அமைக்கப்படும்? அவ்வாறு அமைக்கப்பட்டால் அதனால் இலங்கைக்கு கிடைக்கும் சாதகமான பயன்கள் என்ன? இதுவரையில்முன்னெடுக்கப்பட்டுள்ளபணிகள் என்ன? இந்தியாவின் அதானி நிறுவனம் இலங்கையில் காற்றாலை உற்பத்தியில் இருந்து வெளியேறியுள்ளது. ஆகவே அபிவிருத்தி திட்டங்களை பிற்போடாதீர்கள். ஆளும்தரப்பின்ஐந்துஆண்டுகாலதிட்டங்களே அடுத்த காலப்பகுதியை தீர்மானிக்கும். சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம்.

இப்போது யாழ்ப்பாணத்தில் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு புரியாணி மற்றும் சாப்பாட்டுக் கடைகள் திறக்கப்படுகின்றன. இவ்வாறு சுற்றுலாப் பயணிகளுக்கு சாப்பாடு கொடுக்க புரியாணி கடைகள் திறக்கப்படுகின்றனவே தவிர, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியாவில் உள்ள இளைஞர்களுக்கான வேலைத் தளங்கள் திறக்கப்படவில்லை.

சாப்பாட்டுக் கடைகளால் வேலை கிடைக்குமா? உற்பத்தித்துறை, வேலை வாய்ப்புக்கான தளங்கள் தள்ளிப் போகின்றன. உங்களின்ஐந்தாண்டுகளில்செய்யும்ஆட்சியே அடுத்தக் கட்டத்திற்கு கொண்டு செல்லும், இதற்கான உங்களின் முன்னேற்றமான முயற்சிகளுக்கு எங்களின் ஒத்துழைப்புகளை வழங்க தயாராக இருக்கின்றோம். இந்த தொழிற்சாலைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துங்கள் - என்றார்.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளான சமன் ரத்னபிரிய மற்றும் ரவி குமுதேஷ் ஆகியோர் நேற்று(17) நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

நிதி அமைச்சினூடாக பிரச்சினையை தொழில்நுட்ப ரீதியில் தீர்க்க முயன்ற முயற்சிகள் தோல்வியில் முடிந்ததை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்டத்தால் ஏற்பட்ட அநீதிக்கு அதிகாரிகளிடம் சரியான பதில்கள் இல்லை, மேலதிக நேர கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளமை, அரச விடுமுறை கொடுப்பனவுகள்குறைக்கப்பட்டுள்ளமை, பதவி உயர்வுகள்குறைக்கப்பட்டுள்ளமை, சலுகைகள் தொடர்பாக எவ்வித பதில்களும் கிடைக்காமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது.

## மியான்மரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2024, பெப்ரவரி 3 அன்று மியன்மாரின் துணைப் பிரதமரும் மத்திய அயலுறவு அமைச்சருமானயூதான்ஸ்வேயுடனும், 2025, பெப்ரவரி 13 அன்று தாய்லாந்தின் வெளியுறவு அமைச்சர்மெரிஸ்செங்கியம்போங்ஸாவுடனும் இடம்பெற்ற அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்விஜிதஹேரத்தின்தொலைபேசியில் உரையாடல்கள் உட்பட, இலங்கை மேற்கொண்ட தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சிகளை அடுத்து, இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட இலங்கையர்களை மீட்டு, தாயகத்திற்குத்திருப்பிஅனுப்புவதற்குஉடனடி, உதவியானது தேவைபடுகின்றது என்பதை இரண்டு சந்திப்புகளிலும் அமைச்சர் ஹேரத் வலியுறுத்தினார்.

கடத்தப்பட்ட இலங்கையர்களை மீட்டு, பாதுகாப்பாகத் திருப்பி அனுப்புவதில் மியன்மார் மற்றும் தாய்லாந்து அரசுகள் அளித்த அளப்பரிய உதவிக்கு வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சானது தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இச்செயன்முறையின் போது வழங்கப்படும் நலன்புரி உதவிகளுக்காக, புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் மியன்மாரில் உள்ள பிற சர்வதேச அரசு சாரா அமைப்புகளுக்கு வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு முன்பு, மனித கடத்தல் திட்டங்கள் குறித்து, பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு முன்பு, ஆளும்தரப்பால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளை கண்டிப்பாகக் கடைபிடிக்கவும், இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்புபணியகத்துடன் (SLBFE) வேலை வாய்ப்புகளைச் சரிபார்க்கவும் - என்றுள்ளது.

## பாதாள உலக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவந்துள்ளது.

கிரேன்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நாகலகம் வீதி பகுதியில் இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்று இரவு 9:30 மணியளவில் நடைபெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வீதியில் சென்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்களை இலக்கு வைத்து 9 மில்லிமீட்டர் வகை துப்பாக்கியால் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்த துப்பாக்கிச் சூடு அருகில் இருந்த மறைகாணிகளில் (சிசிரிவி) பதிவாகியுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்கள் முகத்துவாரம் பகுதியைச்சேர்ந்த 23 வயதான நிபுன லக்ஸான் என்று அழைக்கப்படும் 'கொட்டியா' மற்றும் 37 வயதான ஷான் அகமட் ஆகியோராவர்.

இவர்கள் இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களது உயிருக்கு ஆபத்தில்லை என்று வைத்தியசாலைதகவல்கள்தெரிவிக்கின்றன.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவரும் நிபுன என்ற நபரின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்றும், சேதவத்தகசுன்என்றநபரின்வழிகாட்டுதலின் கீழ் இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

2023ஆம் ஆண்டு சேதவத்த கசுனுக்கு சொந்தமான வத்தளை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு பழிவாங்கும் வகையில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், சந்தேகநபர்கள் வந்த மோட்டார் சைக்கிள் நேற்றுக் காலை கிரான்ட்பாஸ் மாதம்பிட்டிய பகுதியில் கைவிடப்பட்டநிலையில்கண்டுபிடிக்கப்பட்டது.




# கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையில் வருடாந்த இப்தார் நிகழ்வுகள் நடந்தன!

( பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வருடாந்த இப்தார் நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் கல்முனை நகர ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பிரதம கதீப் அஷ்ஷேஹ் அல்-ஹாபிழ் எம்.எச்.எம்.இர்பாத் (ரஷாதி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

குறித்த இப்தார் நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.-.

# பதனழிந்த ஐஸ்கிறீம் விற்பனை பூட்சிற்றிக்கு ரூ. 135,000 தண்டம்


நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் நிர்மலானந்தனின் ஆலோசனையிலும் வழிகாட்டலிலும், பூட்சிற்றிகள், உணவகங்கள், தேநீர்சாலை என்பன தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நல்லூர் பொது சுகாதார பரிசோதகர் ம. அனுசூதனன் தலைமையிலான குழுவினரால் கடந்த 12.03.2025 ஆம் திகதி பூட் சிற்றிகள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது கல்வியங்காட்டு பகுதியில் அமைந்துள்ள பூட்சிற்றியில், பழுதடைந்த குளிர்சாதன பெட்டியில் உரிய வெப்பநிலை பேணப்படாமல், பதனழிந்த ஐஸ்கிறீம்களை விற்பனைக்காக வெளிக்காட்டி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து பழுதடைந்த குளிர்சாதன பெட்டியுடன் பதனழிந்த ஐஸ்கிறீம்களை பொது சுகாதார பரிசோதகர் ம. அனுசூதனன் கைப்பற்றினார்.

திங்கட்கிழமை பூட்சிற்றி முகாமையாளரிற்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கினை அன்றையதினமே விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான், பூட்சிற்றி முகாமையாளரிற்கு எதிரான குற்றச்சாட்டுகளிற்கு முகாமையாரை குற்றவாளி என இனங்கண்ட நீதிவான் முகாமையாளரிற்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார்.





# 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரானஇளைஞன்டுபாயிலிருந்து நேற்றைய தினம் அதிகாலை 03.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதியிலிருந்து 27,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 135 சிகரெட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் அம்பாறையில் ஒருவர் இறப்பு

அம்பாறை - மத்திய முகாம் நகரத்தில் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மத்திய முகாம் பொலிஸார் தெரிவித்தனர்.

வேக கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் மத்திய முகாம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மத்திய முகாம் 06 பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் அம்பாறை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்திய முகாம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிலாவெளியில் விபத்து ; ஓட்டோச் சாரதி காயம்

திருகோணமலை - நிலாவெளி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஓட்டோ சாரதி படுகாயமடைந்துள்ளார்.

இந்நிலையில், காயமடைந்த ஓட்டோ சாரதி நிலாவெளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

# கனமூலை முஸ்லிம் ம. வித்தியில் சிறப்புடன் நடந்த இப்தார் நிகழ்வு

(சியாஜ்)

புத்தளம் - தெற்கு கோட்டத்துக்குட்பட்ட கனமூலை முஸ்லிம் மகாவித்யாலயத்தில் இப்தார் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையில் புதிதாக அமையப் பெற்றிருக்கும் மர்ஹூம் அஷ்ஷெய்க் அரூஸ் (கபூரி) ஞாபகார்த்த கேட்போர் கூட மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் பீ.எம். முஸ்னி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்துடன் இப்தாருக்கான பூரண அனுசரணையை ஹூதா லங்கா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# இனநல்லுறவுக்கு முன்மாதிரியாக நடைபெற்ற இப்தார் விசேட நிகழ்வு நாவிதன்வெளியில்

(ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச சபை ஏற்பாடு செய்த இன நல்லுறவுக்கு முன்மாதிரியான புனித ரமலான் இப்தார் விசேட நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர் பி. சதீஸ்கரன் தலைமையில் நாவிதன்வெளி சுபமங்களா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்க இன ஒற்றுமையை மீண்டும் வலியுறுத்துவதற்கான நல்ல சந்தர்ப்பம் தற்போது கனிந்து உள்ளன. கடந்த காலங்களில் தமிழ் முஸ்லிம் மக்கள் இன நல்லுறவுடன் வாழ்ந்தார்கள். நாட்டில் ஏற்பட்ட கசப்பான சில சம்பவங்கள் சமூகங்களுக்கிடையில் இடைவெளி ஏற்பட்டதுடன் முரண்பாடுகளும் தோற்றுவிக்கப்பட்டன. இன்னிலையில், எதிர்காலத்தில் தமிழ்- முஸ்லிம் மக்கள் ஒருவருக்கொருவர் தமது சமய, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை அறிந்து செயற்பட வேண்டியது இரு சமூகங்களுக்கிடையிலான இன ஒற்றுமையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தும் என இப்தார் விசேட மார்க் சொற்பொழிவில் உரையாற்றிய அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் நிறைவேற்று குழு உறுப்பினரும் மருதமுனை இஸ்லாமிய பிரசார மையத்தின் தலைவரும் தாருல் ஹுதா அரபுக் கல்லூரியின் பணிப்பாளருமான அஷ்செய்க். கலாநிதி எம்.எல். முபாறக் (மதனி) தெரிவித்தார்.

இந்த விசேட இப்தார் நிகழ்வில், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ. கமல் நெத்மினி, நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன், கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அசீம், மத்திய முகாம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி, ஆயுர்வேத வைத்திய அதிகாரி, பிரதேசத்தில் உள்ள அரச அலுவலகங்களின் தலைவர்கள், உட்பட பொத்துவில் பிரதேச சபையின் செயலாளர், காரைதீவு பிரதேச சபையின் செயலாளர், உலமாக்கள், கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், நாவிதன்வெளி பிரதேச சபை அலுவலக உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.










காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய சமாதான கூட்டமைப்பு காரைதீவு பிரதேச சபைக்கு போட்டி

பாறுக் ஷிஹான்

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக அம்பாறை மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல் அலுவலத்தில் செவ்வாய்க்கிழமை அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தி வருகின்றன.

இதற்கமைய உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு சார்பாக காரைதீவு பிரதேசசபை வேட்பு மனுக்களுக்கான கட்டுப்பணம் செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியது.

இதன் போது ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவர் கலாநிதி ஹக்கீம் செரீப் உட்பட ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் இணைப்புச் செயலாளர் ஏ.எம். அகுவர் ஆகியோர் இணைந்து கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

மேலும் எதிர்வரும் உள்ளூர் ஆட்சி சபை தேர்தலில் கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டத்திலும் தமது ஐக்கிய சமாதான கூட்டமைப்பு போட்டியிட தீர்மானித்துள்ளதாக ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவர் சரீப் ஹக்கீம் தெரிவித்தார்.




# சம்மாந்துறை பிரதேச செயலக வருடாந்த இப்தார் நிகழ்வுகள்

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

சமூக நல்லிணக்க இப்தாராக இடம்பெற்ற இந்நிகழ்வில் நோன்பின் மாண்புகளை பற்றி சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி எம்.எல்.எம் பஷீர்(மதனி)மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததோடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.எம் நௌசாத், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஐ.எம் மாஹீர், முன்னாள் அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா, மாவட்ட பிரதம கணக்காளர் ஏ.எம்.எம் மஹ்ரூப், பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர், மாவட்ட கணக்காளர் ஐ.எம் பாரீஸ், பிராந்திய நீர்பாசன திணைக்கள பொறியியலாளர் ஆர்.வேல்கஜன், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர்,அம்பாறைமாவட்ட பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி எஸ் ஜெயலத் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள்,உதவி பிரதேச செயலாளர்கள்,கணக்காளர்கள்,பிரதி,உதவி திட்டமிடல்பணிப்பாளர்கள் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள்,திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், வர்த்தக சங்க மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துள கொண்டனர்.



இந் நிகழ்வு பிரதேச செயலக நலனோம்பல் அமைப்பின் நெறிப்படுத்தலிலும் ஒழுங்குபடுத்தலிலும் சிறப்பாக நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2025இல் வெளியிடப்பெற்றது